# சங்கீதம் 96

1 கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைப் பாடுங்கள்.

2 கர்த்தரைப் பாடி, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரித்து, நாளுக்குநாள் அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்.

3 ஜாதிகளுக்குள் அவருடைய மகிமையையும், சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள்.

4 கர்த்தர் பெரியவரும், மிகவும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவருமாயிருக்கிறார்; எல்லா தேவர்களிலும் பயப்படத்தக்கவர் அவரே.

5 சகல ஜனங்களுடைய தேவர்களும் விக்கிரகங்கள்தானே; கர்த்தரோ வானங்களை உண்டாக்கினவர்.

6 மகிமையும் கனமும் அவர் சமுகத்தில் இருக்கிறது, வல்லமையும் மகத்துவமும் அவர் பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது.

7 ஜனங்களின் வம்சங்களே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள், கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள்.

8 கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைக் கொண்டுவந்து, அவருடைய பிராகாரங்களில் பிரவேசியுங்கள்.

9 பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்; பூலோகத்தாரே, நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள்.

10 கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார், ஆகையால் பூச்சக்கரம் அசையாதபடி உறுதிப்பட்டிருக்கும்; அவர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்ப்பார் என்று ஜாதிகளுக்குள்ளே சொல்லுங்கள்.

11 வானங்கள் மகிழ்ந்து, பூமி பூரிப்பாகி, சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்குவதாக.

12 நாடும் அதிலுள்ள யாவும் களிகூருவதாக; அப்பொழுது கர்த்தருக்கு முன்பாக காட்டுவிருட்சங்களெல்லாம் கெம்பீரிக்கும்.

13 அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்.

**அறிமுகம்:**

சங்கீதம் 96 என்பது அனைத்து தேசத்தாரும் கர்த்தரை ஆராதிக்க அழைக்கும் ஒரு துதி மற்றும் மகிமை பாடலாகும். இந்த சங்கீதமானது, இந்த சங்கீதமானது, தேவனுடைய பெட்டி எருசலேமுக்கு கொண்டு வந்த போது, தாவீதினால் கொடுக்கப்பட்டு ஆசாப்பினிடத்தில் கொடுத்து பாடப்பட்ட சங்கீதமாய் இருக்கிறது. ( 1 நாளா 16: 7-36). சங்கீதம் 96, இஸ்ரவேலர் தங்கள் மத்தியில் தேவனின் பிரசன்னத்தைக் கொண்டாடிய அந்த மகிழ்ச்சியான நேரத்திலிருந்து வந்திருக்கலாம். பின்னர், இஸ்ரவேலருக்கு தேவனின் மகத்துவத்தையும், அனைத்து மக்களாலும் அறியப்பட வேண்டும் என்ற அவரது விருப்பத்தையும் நினைவூட்டும் ஒரு பாடலாக இது ஆலயத்தில் வழிபாட்டில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இந்த சங்கீதத்தை பற்றி போதுமான அளவுக்கான, பிண்ணனி தகவல் நமக்கு இல்லை. இந்த சங்கீதத்தை பின்வருமாறு நாம் பிரிக்கலாம். 1. ஆராதிப்பதற்கான அழைப்பு 96:1-3; 2. ஆராதிப்பதற்கான காரணம் 96:4-6; 3. ஆராதனையின் கருத்து 96:7-10; 4. நியாயதிபதியின் வருகை 96:10-16.

இந்த சங்கீதம் நமக்கு கொடுக்கும் செய்தி என்ன? இந்த சங்கீதம் நாம் தேவனை ஆராதிப்பதன் முக்கியத்துவத்தை வழிவுறுத்துகிறது, என்பதோடு, தேவனால் படைக்கப்பட்ட நாம் அவரை மகிமைப்படுத்துவது நாம் படைக்கப்பட்டதன் நோக்கமாய் இருக்கிறது என்பதை காண்பிக்கிறது. (வ 7,8; ஏசா 96:7,8). தேவன் பயப்படத்தகவர் என்றும், அவருடைய வார்த்தைக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் என்கிற நம்பிக்கை நமக்கு தருகிறதாய் இருக்கிறது (வ 9). நியாயந்தீர்ப்பின் எச்சரிப்பையும் நமக்கு தருகிறது(வ 13).

1. **ஆராதிக்க அழைப்பு 96:1-3 –**
    a. **“கர்த்தரை பாடுங்கள்” (வ 1)** – மனிதர்களின் வாழ்க்கையில் பாடுதல் என்பது ஒரு முக்கியமான செயலாக பார்க்கப்படுகிறது. பாடுவதற்கும், நம்முடைய மனநிலைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. பாடுவது மனித வடிவமைப்பின் ஒரு பகுதி. நாம் பாடும்போது, நமது மூளை டோபமைன் மற்றும் எண்டோர்பின்களை வெளியிடுகிறது, அவை நம்மை மகிழ்ச்சியையும் அமைதியையும் உணர வைக்கும் முளையில் சுரங்கும் ரசாயனங்கள் என்று அறிவியல் காட்டுகிறது. தேவன் நம்மை இசை உருவாக்கும், ஆத்துமாவை உடைய ஜீவாஆத்துமாவாக படைத்தார். இந்த பாடல் மற்றும் இசையானது, நம்முடைய இருதயத்தில் இருந்து வர கூடியதாக இருக்கிறது. யோசித்துப்பாருங்கள், மனிதர்களை விசேஷித்த நபர்களாய் மற்ற மிருகங்களிலிந்து உயர்ந்தவனாய் காண்பிப்பது, நமக்குள் தேவன் கொடுத்த ஆத்துமா தான் (ஆதி 2:7). அந்த ஆத்துமாவில் இருந்து பாடும் தன்னையை மனிதர்களை தவிர வேறு எந்த

உயிர்களும் பெறவில்லை. பாடுதல் என்பது நம்முடைய உணர்ச்சிகளுடன் தொடர்புடையதாக இருக்கிறது. பாடுதல் என்பது சபையிலும், சகோதர்கள் மத்தியிலும் ஐக்கியத்தை எற்ப்படுத்த கூடியதாக இருக்கிறது. (ரோமர் 15:5-11). இந்த வசனப்பகுதியஅல் யூத கிறிஸ்தவர்கள், புற ஜாதியான கிறிஸ்தவர்கள் எல்லாரும் தேவனை இணைந்து மகிமைப்படுத்த வேண்டும் என கூறியிருக்கிறதை கவனியுங்கள். இந்த சங்கீதத்தில் கூட "எல்லாரும்" என கூறப்பட்டுள்ளதை கவனியுங்கள்.

b. பாடுவது நித்தியமானது - அது பரலோகத்தில் தொடங்கி, மனித இதயங்களில் பாய்ந்து, துதியுடன் பரலோகத்திற்குத் திரும்புகிறது.

c. புதிய ஏற்பாட்டில், கிறிஸ்தவர்கள் பாடுவதற்கு இசைக்கருவிகளை பயன்படுத்தியதற்கு எந்த ஆதாரமும் இல்லை. பாடுவதற்கு இசைக்கருவிகளை பயன்படுத்துங்கள், என்று சொல்லும் படி எந்த கட்டளையையும் நாம் பெற்றுக்கொள்ள வில்லை. ஆனால் புதிய ஏற்பாட்டில் நாம் பாடும்ப்ட்டில் இசையானது நம்முடைய இருதயத்தில் இருந்து வர வேண்டும் என கட்டளையை நாம் பெற்றுள்ளோம். (எபே 5:19; எபி 13:15). புதிய ஏற்பாட்டில் ஒருவர் சந்தோஷமாய் இருந்தால் சங்கீதப்பாடக்கடவன் என கூறப்பட்டுள்ளது. (யாக் 5:19). தேவன் துதித்துப்பாடுவது நாம் படைக்கப்பட்டதன் நோக்கமாய் இருப்பதுப்போல, அதை அவர் கூறியப்படி, அவருடைய வார்த்தையின் படி இருதயத்தில் இருந்து பாடுவது முக்கியமானதாக இருக்கிறது.

d. தேவனை ஆராதிப்பதற்கான காரணம் (சங் 96:4-6) – நாம் ஏன் தேவனை ஆராதிக்க வேண்டும்? இதற்கான பதில் அவர் நம்மை படைத்திருக்கிறார் என்பது தான்.

    i. "பயப்படத்தக்கவர்"(வ 4) – தேவன் பயப்படத்தக்கவர் என்பது, நாம் அவரை விட்டு விலகி போவது அல்ல! இந்த பயமானது, தேவன் எவ்வளவு பெரியவராய் இருக்கிறார் என்பதிலிருந்து, அவருக்கு முன்பாக நாம் ஒன்று இல்லை என்பதை புரிந்துக்கொள்ளும்போது அவருக்கு நாம் செலுத்தும் கனத்தையும், மரியாதை காண்பிக்கிறது. உதாரணம் (லூக் 5:4; லூக் 7:16). ஆனால் மிக முக்கியமான காரியம் என்னவென்றால் இந்த வசனம் நம்மை எச்சரிக்கிறது. அதாவது, தேவன் வெறும் அசையாத, நடக்க முடியாத, பேச முடியாத ஒரு உயிரற்ற பொருள் இல்லை. அவர் சர்வ வல்லமையுள்ளவர் என்பதாலும், அவர் நம்முடைய படைப்பாளி என்பதாலும் நாம் அவருக்கு முன்பாக பயந்து தான் ஆக வேண்டும். (வ 6-9)

    ii. தேவனுக்கு பயப்படுவது என்பது என்ன? அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதும், அவருக்கு பிரியமான காரியங்கள்

செய்வதும் தான். தேவனுடைய வார்த்தை மீறி நடப்பதால் என்ன ஆபத்து என்பதை வேதத்தில் நமக்கு கூறியிருக்கிறது. ( லேவி 10:1-3).நாதாபும், அபியூவின் சம்பவம் நமக்கு எச்சரிப்பை கொடுக்கிறது.

e. ஆராதனையின் கருத்து 96:7-10: - “கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள்” (வ 8). தேவனுக்கு மகிமை செலுத்த நாம் என்ன செய்ய வேண்டும்? தேவனுடைய வார்த்தை கீழ்ப்படியாமல், நம்மால் தேவனை மகிமைப்படுத்த முடியுமா? நாம் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவது தான் அவரை மகிமைப்படுத்துவது. (யோவா 4:23,24)

2. நியாயதிபதியின் வருகை 96:10-16. – “அவர் வருகிறார்” – மக்கள் தேவனின் சிறப்பான படைப்பு. அவர் நம்மைப் படைத்தார், நாம் அவருக்குப் பொறுப்புள்ளவர்கள், நாம் எப்படி வாழ்கிறோம் என்பதற்கு நாம் அவருக்குக் கணக்குக் கொடுப்போம். நாம் தேவனுக்கு பயப்பட வேண்டும் (அவரைப் புறக்கணித்தால் பயப்படுவதற்கு போதுமான அளவு அவரை மதிக்க வேண்டும்) மற்றும் அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். கர்த்தராகிய ஆண்டவரை உங்கள் முழு இருதயத்தோடும், உங்கள் முழு ஆத்துமாவோடும் நேசிக்கவும். நாம் அவரை நேசித்தால், அவருக்குக் கீழ்ப்படிவோம்.

நிறைவாக: